## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி.

ம.சா. 1 தேதி. 03.06.2025

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 427/2019 | | |
| பெயர் | பிலிக்ஸ் | த/பெ, | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் சிதம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **எ.ம.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 50AB 7411 என்ற TATA ACE வாகனம் எங்கள் அலுவத்திற்கு ஆய்விற்கு கடந்த 03.12.2018 அன்று வந்தது. RC புத்தகத்தின்படி அதன் சீட் எண்ணிக்கை 2 நபர்கள் என்றால் சரிதான். மேற்படி ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம் காலத்தில் தாக்கல் இல்லை என்று உள்ளது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் ஆய்வின்போது ஆஜர் செய்திருப்பார்கள். இல்லை என்பதால் தான் ஆஜர் செய்யவில்லை. இந்த ஆய்வறிக்கையின் படி மேற்படி வாகனத்தை ஓட்டு நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். 03.12.2018 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

### பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சிதம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தற்போது உதவியாளராக வேலை பாரத்து வருகிறேன். 2024 மார்ச் 15 அன்று தான் மேற்படி அலுவலகத்தில் வேலையில் சேர்ந்தேன். எ.ம.சா.ஆ.2 ஆனது செல்வம் என்ற மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவரை விசாரணை செய்தால் தான் அறிக்கையின் உண்மை தன்மை தெரியும் என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். ஆய்வறிக்கையில் No D.L. என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த

வட்டார போக்குவரத்து அலுவலகம் இல்லாமல் வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அதைப்பற்றி என்னால் சொல்லமுடியாது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.